செ.வெ. எண்: 571 நாள்: 23.09.211

<u>பொதுத் (தேர்தல்கள்–1) துறை</u>

## <u>செய்தி வெளியீடு</u>

உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை முன்னிட்டு, வாக்காளர் பட்டியல்களில் பெயர் சேர்த்தல் குறித்து பெருமளவில் வினாக்கள் எழுப்பப்படுகின்றன. சட்டம் மற்றும் விதிகளின்படி, வாக்காளர் பட்டியல்களில் பெயர் சேர்த்தல்/பெயர் நீக்கல் செய்யப்படுவதற்குமுன், படிவம் தாக்கல் செய்த நாள் நீங்கலாக, ஏழு நாட்கள் அறிவிப்புக் கால அவகாசம் கொடுக்கப்படவேண்டும். இத்துடன் மனுக்களைப் பரிசீலனை செய்வதற்கு குறைந்தபட்ச கால அவகாசமும் தேவைப்படுவதால், சமீபத்தில் பெயர் சேர்ப்பதற்கு மனுக்கள் அளித்தவர்களின் பெயர்கள், உள்ளாட்சி மன்றத் தேர்தலுக்காக வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய கடைசி நாளுக்கு அதாவது 29.09.2011–க்கு முன்னால், சட்டப்படி சேர்க்கப்பட இயலாது.

2. மேலும், வாக்காளர் பட்டியல்களில் பெயர்கள் சேர்க்கப்படுவதற்கு தகுதியேற்படுத்தும் நாள் 01–01–2011 ஆகும். எனவே, 01–01–2011–க்குப் பிறகு 18 வயது நிறைவடைந்தோர் அனைவரும், 24–10–2011 அன்று தொடங்கும் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தத்தின்போதுதான் பெயர்களைச் சேர்த்துக்கொள்ள முடியும். அவ்வாறு பெயர்கள் சேர்க்கப்பட்ட வாக்காளர் பட்டியல்கள் 05–01–2012 அன்று வெளியிடப்படும். எனவே, தற்போது நடைபெறும் தொடர்திருத்தத்தில் அத்தகைய நபர்களின் பெயர்கள் சேர்க்கப்பட இயலாது.

**தலைமைத் தேர்தல் அதிகாரி,**
**தமிழ்நாடு**

**வெளியீடு: –**

**ஆணையர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**